பக்கங்கள்: 21

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 04 வெள்ளிக்கிழமை 18.03.2022 கதிர் 01

## நீர்த்தாங்கியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

வெலிமடை பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றின் நீர்த்தாங்கியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, நேற்று குறித்த சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் பணியாற்றிய நபர் ஒருவரே, குறித்த நீர்த்தாங்கியில்

☞ 2

# பேச்சுக்கு உரிய சமயம் இதுதான்

## அடித்துக் கூறுகிறார் சித்தார்த்தன்



**யாழ்ப்பாணம், மார்ச் 18**

**அரசாங்கம் தற்போது பல வீனப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் பலப்பட்டுக் காணப்படுகிறோம். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளமையை சாதுரியமாகப் பயன்படுத்த வேண்டியது எமது கடமை என புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

☞ 2



## மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

## நேரிய பாதையில் சீரிய பயணம் நிறுவன வழிகாட்டி பெருமிதம்

### முகாமைத்துவப் பணிப்பாளர் விசேட செய்தி



காலைக்கதிர் மாலை இதழ் மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையிட்டு நமது பசுமை ஊடக இல்லத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சி.அனுராஜ் நம் வாசகர்களோடும் ஏனையோரோடும் பகிர்ந்து கொள்ளும் செய்தி வருமாறு:-

'காலைக்கதிர்' பத்திரிகையும், பசுமை ஊடக இல்லமும் கைக்கோர்த்துப் பயணிக்கத்

☞ 2

## அரசின் முடிவுக்கு ஐ.தே.க. வரவேற்பு



சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்தை எமது கட்சி வரவேற்கின்றது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி

☞ 2

# இலங்கைக்கு ஆதரவளிக்குமா சர்வதேச நாணய நிதியம்?



## பேச்சுக்குத் தயார் என்கிறார் கெரி ரைஸ்

இலங்கைக்கு ஆதரவளிக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது எனச் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் கெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய - பசுபிக் பிராந்திய பணிப்பாளர் சென்யோங் ரி கடந்த 15ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோருடன் கலந்துரையாடிய போதிலும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் நிவாரணத்துக்காக இலங்கை இன்னும் விண்ணப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கோரிக்கை விடுக்கப்பட்டால், அதைப் பரிசீலிக்கலாம் என்று சர்வதேச நாணய நிதியம் கூறுகின்றது.

எவ்வாறாயினும், அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை உத்தியோகபூர்வ பேச்சுக்களை நடத்தவுள்ளதாக முன்னதாகத்

☞ 2

## நிலையான ஆட்சிக்கு முதலில் ஜனாதிபதித் தேர்தலே வேண்டும்

### பொன்சேகா எம்.பி. வலியுறுத்து



பொதுத்தேர்தல் அல்ல, முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்பட வேண்டும். இதுவே உறுதியான ஆட்சிக்கு வழிசமைக்கும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஏன் ஜனாதிபதித் தேர்தலை முதலில் கோரியுள்ளார் என ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தல்

☞ 2

## நெருக்கடிக்குத் தீர்வுகாண கால அவகாசம் வேண்டும்!

### கெஞ்சுகின்றது அரசு

நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். இதனை உணர்ந்து, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மக்கள் எமக்கு சிறிது காலம் அவகாசம் வழங்க வேண்டும்.

- இவ்வாறு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு எந்தத் தரப்பு காரணம் என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். இது நெருக்கடியான காலம். இதில் இருந்து மீள்வதற்கு எமக்கு காலம் அவசியம். அந்த வாய்ப்பை மக்கள் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

☞ 2

## அரசுக்கு எதிராக ஐ.தே.க. 25இல் சத்தியாக்கிரகம்!

ஐக்கிய தேசியக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியுமே குறித்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

## தோல்வியை ஏற்றுக்கொண்ட கோட்டா கௌரவமாகப் பதவி விலக வேண்டும்



### ஐக்கிய மக்கள் சக்தி அழுத்தம்

ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்துக்கு அஞ்சியே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். தோல்வியை ஏற்றுக்கொண்ட அவர் கௌரவமாகப் பதவி துறக்க வேண்டும்

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. எனினும், ஜனாதிபதி மௌனம் காத்தார். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் நடைபெறவுள்ளது என்ற தகவல் வந்ததும்

☞ 2

## நேரிய பாதையில் சீரிய பயணம் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கி நேற்றோடு இரண்டு வருடங்கள் நிறைவடைந்திருக்கிறது. எந்த விடயத்திலும் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்ற ஒரே நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட எமது ஊடகப் பயணம் உலக ஒழுங்குக்கும், நாட்டு நிலைமைகளுக்கும் அமைய பல சோதனைகள் – சவால்களைச் சந்தித்திருந்தாலும், அதன் நோக்கத்திலிருந்து வழுவாமல் மிகச் சரியான பாதை வழியே இலக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

தமிழ் ஊடகப் பரப்பில் மின்னிதழ் பாரம்பரியத்தை ஆரம்பித்து வைத்த பெருமை காலைக்கதிருக்கே உரியது. அது விடயத்தில் முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் காலைக்கதிர் இருந்தது எம்மைப் பெருமை கொள்ள வைக்கிறது. 2019 ஆம் ஆண்டின் கடைசிக் காலப்பகுதியில் ஆரம்பித்த கொரோனாப் பெருந்தொற்றுப் பேரவலம், கண்டங்கள் தாண்டி, நாடுகள் தாண்டி, நமது வாசல் வரை வந்து நிற்கிறது. தொற்று அபாயம் – முடக்கம் காரணமாக முழு உலகுமே வீடுகளுக்குள் அடங்கிப் போய் இருந்த நேரத்தில் வாசகர்களின் செய்தித் தேடலுக்கு ஏற்ற வகையில் சற்றும் தரம் குன்றாமல் எமது மின்னிதழ் வாசகர் கரங்களுக்குக் கிட்டியமை எமது சாதனை என்பதில் நாம் பெருமை கொள்கிறோம்.

அந்தப் பெருமை வெறுமனே எம்மால் மட்டும் கிட்டியதன்று, எம்மைச் சார்ந்த நிறுவனத்தின் அத்தனை பணியாளர்களும், எல்லாவற்றுக்கும் மேல், எம்மை தட்டிக் கொடுத்த வாசகர்கள், எமது வெற்றிப்பயணத்தில் ஏணிப் படிகள். அந்த வகையில் எமது பத்திரிகையின் ஆசிரியர், ஆசிரிய பீடத்தினர், பணியாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் பெறுமதி மிக்க வாசகர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றிகள்.

இன்று போலவே என்றும் தரம் குன்றாமல் காலைக்கதிர் தொடர்ந்தும் உங்கள் கரம் கிட்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரம், எங்கள் மீதான உங்கள் அன்பும், ஆதரவும் என்றென்றும் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். எமது வெற்றிப் பயணத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் உங்களிடமிருந்து ஆரோக்கியமான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எதிர்பார்த்திருக்கிறேன்.

**என்றும் அன்புடன்,**
**சி. அனுராஜ்**
**முகாமைத்துவப் பணிப்பாளர்**
**பசுமை ஊடக இல்லம்.**

## அரசின் முடிவுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு, இன்றைக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே எமது கட்சி ஆலோசனை வழங்கியது. அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தியது.

எனினும், நெருக்கடி உச்சம் பெற்ற பின்னரே, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறும் முடிவை அரசு எடுத்துள்ளதும். இது காலம் கடந்த ஞானம். இருந்தாலும் தாமதித்தேனும் சிறந்த முடிவு எடுக்கப்பட்டதை வரவேற்கின்றோம் – என்றார்.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் அரசின் முடிவை வரவேற்றுள்ளது.

## இலங்கைக்கு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்காக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு வேலைத்திட்டமொன்றுக்கு வருவதினூடாக, இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பை அதிகரிக்கவும், வளர்ச்சியை நிலையான திசையில் செலுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## நெருக்கடிக்குத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடியான சூழ்நிலையிலும் எதிரணியினர் அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர் – என்றார்.

## நிலையான ஆட்சிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டு எமது கட்சி வெற்றி பெறும் பட்சத்தில், மற்றுமொரு கட்சி உறுப்பினர் ஜனாதிபதியாக இருந்தால் அவர் தடையை ஏற்படுத்துவார். கடந்த ஆட்சியில் மைத்திரி செயற்பட்ட விதம் அனைவருக்கும் தெரியும். எனவேதான் முதலில் ஜனாதிபதித் தேர்தலைக் கோருகின்றோம்.

எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைக் கட்சிதான் தீர்மானிக்க வேண்டும். அதில் தலைவரும் ஆதிக்கம் செலுத்துவார். கட்சி எடுக்கும் முடிவை நாம் ஏற்போம். ஆனால், பொதுவேட்பாளர் வெளியில் இருந்து வர முடியாது. எமது கட்சி வேட்பாளர், பொதுவேட்பாளராகலாம் – என்றார்.

## தோல்வியை ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் விழித்துக்கொண்டார். மக்கள் கூட்டத்தை கண்டதும் அஞ்சிவிட்டார். அதனால்தான் அர்த்தமற்ற உரையை ஆற்றினார்.

தன்னால் முடியாது, தான் தோல்வி என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். எனவே, அவர் கௌரவமாகப் பதவி துறக்க வேண்டும். – என்றார்.

## பேச்சுக்கு உரிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்களை எட்டிவிட்ட நிலையில் தனக்கும் தன்னுடைய அரசாங்கத்துக்கும் சர்வதேச ரீதியாகவும் உள்ளூர் முறையிலும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைச் சமாளிக்கவும் சர்வதேசத்தை ஏமாற்றவும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை திடீரென பேச்சு அழைத்துள்ளார். இந்த சந்திப்பைத் தமிழ் தரப்பினர் பலர் விரும்பவில்லை. இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன?'' – என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

ஜனாதிபதி தானாக எங்களைப் பேச்சுக்கு அழைக்கவில்லை. சர்வதேசம் தொடர்ந்து கொடுத்துவரும் அழுத்தம், மனித உரிமை பேரவையின் மறைமுகமான அழுத்தங்கள், அறிக்கைகள் மற்றும் இந்தியத் தரப்பினரின் வலியுறுத்தல் காரணமாகவும் தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார மற்றும் ஆட்சி நெருக்கடி காரணமாகவே அதைச் சமநிலைப்படுத்த ஜனாதிபதி கூட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்துள்ளார்.

இது தவிர கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்திலிருந்து சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித்தரும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடிதம் மூலம் கோரிக்கை விட்டிருந்தார். அதுவுமன்றி அண்மையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜனாதிபதி மாளிகை முன்பாக காணி அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று செய்திருந்தோம். அவ்வேளையிலும் ஜனாதிபதியைச் சந்திக்கும் முயற்சியை மேற்கொண்டோம்.

இவ்வாறான சூழ்நிலைகளே கூட்டமைப்பை ஜனாதிபதி பேச்சுக்கு அழைக்கக் காரணங்களாகும். மிக நீண்ட காலத்துக்குப் பின்பு இலங்கை அரசாங்கத்துக்கு ஓர் ஆலோசனையை இந்தியா முன்வைத்திருந்தது. அது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இலங்கை தமிழ் மக்களுடைய நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். அதுவே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி என்பதை எடுத்துக் கூறியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் எந்த தீர்மானத்தையும் நிறைவேற்றமாட்டேன் என்று ஜனாதிபதி பிடிவாதம் பிடித்து வருகிறார். இது சர்வதேச ரீதியாக எமக்கு சாதகமாகவுள்ளது. நாட்டினுடைய இன்றைய பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் எமக்கு சாதகமாகவுள்ளன.

ஜனாதிபதி எப்போது பலவீனப்பட்டுக் காணப்படுகிறாரோ அப்போதுதான் நாம் அவருடன் பேசமுடியும். அவர் தற்போது சகல வகையிலும் பலவீனப்பட்டுக் காணப்படுகிறார். குறிப்பாகப் பொருளாதார நெருக்கடிகளுடன் சேர்ந்து ஆட்சியின் உள்ள நெருக்கடிகள் அவரை கதிகலங்க வைத்துள்ளன. நாம் இப்போது பலப்பட்டு நிற்கின்றோம், அவர் பலவீனப்பட்டு நிற்கின்றார்.

இந்த சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்தவேண்டும். சர்வதேசமும், மறைமுகமாக மனிதவுரிமை பேரவையும், இந்தியாவும் தமிழ் மக்களுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வுகாணுங்கள் என்று அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிற நிலையில், நாம் ஜனாதிபதியுடன் பேச வில்லையாயின் அவர்கள் கொடுத்த அழுத்தத்துக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

எனவேதான் பேசவேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கிறோம். எது எவ்வாறு இருந்தபோதும் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின் ஜனாதிபதியுடன் பேச வேண்டியது அவசியமானது. மக்களில் பலரும் சில தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் இப்பேச்சை விரும்பவில்லை, விசனத்தைத் தெரிவித்து வருகிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

மக்களின் கருத்தில் நியாயம் இருக்கிறதென்பது உண்மையே. காரணம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதியோ அவருடைய அரசாங்கமோ ஆர்வம் காட்டவில்லை, உதாசீனம் செய்துவருகிறதென்பது உண்மையே.

இருந்தபோதிலும் தற்போது கூட்டமைப்பை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்துள்ளார் என்ற நிலையில் நாம் அதை புறக்கணிப்பது பொருத்தமான விடயமல்ல. அவருடன் பேசினால் மட்டுமே அவர் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு கூட்டமைப்பு தனது அடுத்த நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க முடியும்.

அண்மையில் இந்தியா சென்று திரும்பியுள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார். ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கு இடையிலான பேச்சு தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தொடர்பாக இருக்கும் என்றார். எனவே எமது பிரச்சினையை நாமே பேசித்தீர்ப்போம் என்ற வழிமுறைக்கு அரசாங்கம் வந்திருக்கிறதென்ற சமிக்ஞையை காட்டியுள்ளார். எனவே வாய்ப்பை பயன்படுத்திப் பார்ப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நீர்த்தாங்கியிலிருந்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ந்து உயிரிழந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அம்பகஸ்தோவ பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், நீண்டகாலமாக நோயொன்றால் பாதிக்கப்பட்டிருந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701, 076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கருத்துருவாக்கி காலைக்கதிர்

உங்கள் காலைக்கதிர் மாலைப் பத்திரிகை இன்று தனது மூன்றாவது ஆண்டில் கால் பதிக்கிறது.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேல் உங்களைத் தினசரி தவறாது தேடி வரும் காலைக்கதிர் ஈராண்டுகளுக்கு முன்னர் பசுமை ஊடக இல்ல வெளியீடாக தன்னை தகவமைத்துக் கொண்ட காலத்தில் இருந்து, இயற்கையைப் பேணி, பசுமைச் செழுமையை நிலைநிறுத்துவதில் அதிக ஈடுபாடும் அக்கறையும் காட்டி வருகின்றது.

நமது நிர்வாகி – முகாமைத்துவப் பணிப்பாளர் – சி.அனுராஜ் அவர்கள் பசுமை சூழலைப் பேணுவதில் தீவிர ஈடுபாடு கொண்ட சூழலியலாளர் என்பதனால், நமது சகோதர ஏடாக 'செம்மண்' வார இதழை உயர்தரத்தில் தவறாது நீங்கள் பெறும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. அது மாத்திரமல்ல, நமது ஞாயிறு காலைப் பத்திரிகை பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கும் பல தரமான ஆக்கங்களைத் தாங்கி வருகின்றமையையும் நீங்கள் அவதானத்திருப்பீர்கள்.

அச்சுப் பதிப்புகளுக்காக கணக்கு வழக்கு இன்றி காகிதாதிகளைப் பயன்படுத்துவது காடழிப்புக்கு – மரங்களை வெட்டிச் சாய்ப்பதற்கு – இயற்கை அழிவுக்கு – வழி செய்யும் என்பது இன்றைய யதார்த்தப் புறவுண்மையாகும்.

வங்கிகளில் கூட தேவையற்ற ஒரு சிறிய ரசீதை அச்சிடுவதற்காக ஒரு துண்டு காகிதத்தை பயன்படுத்துவது சூழலியல் பாதிப்புக்கு வழிசெய்யும் நடவடிக்கை என்பதை நினைவூட்டி, அதனால் தேவையற்ற ரசீதுகளை அச்சிடக் கோராதீர்கள் என்று ஆலோசனை கூறப்படும் போது, பத்திரிகைகளின் பெயரால் – விற்பனைக்கே போகாமல் வீணாகத் திரும்பும் பத்திரிகைப் பிரதிகளுக்கும் சேர்த்து – தினசரி பல்லாயிரம் தொன் காகிதாதிகளை நாசமாக்குவது காடழிப்புக்கு – இயற்கை அழிவுக்கு – வழி செய்யும் பசுமை விரோத செயலாகும். அதனால்தான் அச்சுப்பதிப்பில் அதிக ஈடுபாடு காட்டுவதைத் தவிர்த்து, கூடியவரை மின் இதழ்களாகக் காலைக்கதிர் பத்திரிகைகளை காலையும் மாலையும் தவறாது உங்களை எட்டச் செய்வதில் நாம் அதிக கரிசனை காட்டி வருகிறோம்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் இவ்வாறு மின்னிதழ்களாக வாசகர்களை எட்டும் பாதையை – பூமி பந்தெங்கும் பரந்து வாழும் நம் தமிழ் உறவுகளையும், வாசகர்களையும், அவரவர்களின் இலத்திரனியியல் கருவிகள் மூலம் காலையிலும் மாலையிலும், ஒரு நாள் கூட தவறாமல், தேடிச் சென்று சந்திக்கின்ற முறைமையை – நாமே முதலில் அறிமுகப்படுத்தினோம். இவ்விடயத்தில் நாங்கள் வழிகாட்டிகள் என்று கூறுவது தற்பெருமை கூற்றாயினும், அதுதான் உண்மை.

எந்தப் பிரதியுபகாரமும் எதிர்பாராமல் – இலவசமாக – இந்தப் பணியை நாமாகத் தேடிச் சென்று ஆற்றுவதற்குப் பலன் கிட்டாமல் இல்லை.

உலகளாவிய ரீதியில் பரந்துபட்டு கிடக்கும் புலம்பெயர் சமூகத்தின் மத்தியிலும், தமிழர் தாயகத்திலும், அதற்கு வெளியில் நாட்டிலும், வதியும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் காத்திரமான கருத்துருவாக்கி என்ற மனப்பதிவு, காலைக்கதிருக்கு இன்று கிட்டியிருக்கின்றமை மறுக்க முடியாத உண்மை.

பண ரீதியான இலாப நோக்கம் ஏதுமின்றி, நமது மக்களுக்கு உண்மையை எடுத்துரைக்கும் பணியை தளராது முன்னெடுக்க வேண்டும் என்ற எமது முகாமைத்துவப் பணிப்பாளரின் சீரிய நோக்கத்தினால் சாத்தியமான பெருமை இது. அவரின் அந்தக் கருத்தியலை உள்வாங்கி, காலைக்கதிர் பணியாளர்கள் ஒன்றிணைந்து ஆற்றிய சேவையினால் தமிழர் தேசத்தின் கருத்துருவாக்கி என்ற உயரிய நிலையை உங்கள் காலைக்கதிர் எட்ட முடிந்துள்ளது. இதற்காக உழைக்கும் அனைவருக்கும், வாசகர்களுக்கும் நமது நன்றிகள்.

# வவுனியாவில் மின் இணைப்பு தொடர்பான 100 முறைப்பாடுகளுக்கு தீர்வு கிடைத்தது

வவுனியாவில் மின் இணைப்பு தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்ற 100 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவின் நுகர்வோர் விவகார பணிப்பாளர் யசந்த ரதுவிதான தெரிவித்துள்ளார்.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மின்சார சேவையுடன் இணைந்து வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடமாடும் சேவையை மூன்று தினங்களுக்கு முன்னெடுத்திருந்தது. இது தொடர்பில் நேற்று (வியாழக்கிழமை) கேட்ட போதே அவர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

வவுனியா மாவட்டத்தில் புதிய மின் இணைப்பு பெறுதல், மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்தல், மின்மானி மாற்றுதல், மின் இணைப்பை இடமாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவால் பிரதேச செயலகங்கள் ஊடாக முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்தன.

இவை தொடர்பில் வவுனியா மாவட்டத்திலிருந்து இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு 100 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் அதற்குத் தீர்வு காணும் முகமாக மின்சார சபையுடன் இணைந்து நடமாடும் சேவை ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது காணி ஆவணம் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக மின் இணைப்பு தொடர்பில் பிரச்சினைகளை எதிர்கொண்ட மக்களுக்கு மின்சார சபையின் ஊடாக தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இந்த நடமாடும் சேவையில் பலரும் கலந்து கொண்டு மின்சார சபையிடம் இருந்து தமக்கான தீர்வுகளையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவின் நுகர்வோர் விவகார பணிப்பாளர் யசந்த ரதுவிதான, பொதுச்சேவை ஆணைக்குழு உத்தியோகஸ்தர் ரஹான், வவுனியா மாவட்ட பிரதம மின் பொறியியலாளர் மைத்திலி தயாபரன் மற்றும் மின்சார சபை அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கொக்குத்தொடுவாய் மகாலிங்கேஸ்வரர் ஆலயம் 38 வருடங்களின் பின் புதுப்பொலிவு பெற்றது





விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களுள் ஒன்றான கொக்குத்தொடுவாய் பகுதியில் அமைந்துள்ள, தொன்மை மிக்க மகாலிங்கேஸ்வரர் ஆலயத்தில் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு வியாழக்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

குறிப்பாக கொக்குத் தொடுவாய்ப்பகுதியில் இருந்த தமிழ்மக்கள் யுத்தசூழல் காரணமாக கடந்த 1984 ஆம் ஆண்டு, தமது பகுதிகளிலி ருந்து இடம்பெயர்ந்த நிலையில், கடந்த 2011 ஆம் ஆண்டிலேயே அவர்கள் மீண்டும் கொக்குத் தொடுவாயில் மீளக்குடியமர்த்தப் பட்டனர். அந்தவகையில் ஏறத்தாழ 38 ஆண்டுகளாக சீரமைப்பின்றிக் காணப்பட்ட குறித்த மகாலிங்கேஸ்வரர் ஆலயத்தை கொக்குத் தொடுவாய் மக்கள் இணைந்து சீரமைப்புச்செய்துள்ளனர். இந்த நிலையில் எண்ணெய்காப்புச் சாத்தும் நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோருடன் சிவன் அடியவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் இவ்வாலயம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆலயங்களில், பன்னிரெண்டாவது பதிவெண்ணினைக்கொண்ட மிகவும் தொன்மையான ஆலயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மனைவியைத் தாக்கிய கணவனுக்குப் பிணை!

குடும்பத்தில் ஏற்பட்ட வன்முறையால் மனைவியை தலைக்கவசம் மற்றும் விறகுக்கட்டையால் தாக்கிக் காயப்படுத்திய கணவனை பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைகளுக்கு அழைத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது நீதிவானால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கணவன் அவரது மனைவியைத் தாக்கி காயப்படுத்தியிருந்தார்.

அயலவர்களினால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மனைவி வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக கணவனை விசாரணைக்கு அழைத்த பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்து நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திப்பட்டபோது சந்தேக நபருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் கிராம அலுவலரின் கடிதம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை இதையடுத்து குறித்த சந்தேக நபரான கணவன் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

# தனித்துவமான தன்மை கொண்ட ஊடகமாக மிளிரும் காலைக்கதிர்

## நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. பாராட்டு



காலைக்கதிர் மாலைப் பத்திரிகை மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றமையை ஒட்டி தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வழங்கிய வாழ்த்துச் செய்தியின் விவரம் வருமாறு:–

வடபகுதியில் வெளியிடப்படும் தமிழ் நாளிதழ்களின் ஒரு முன்னணிப் பதிப்பாக விளங்குகின்ற காலைக் கதிர்ப் பத்திரிகை செய்திகளையும் முக்கிய தகவல்களையும் சுடச் சுட மக்களுக்கு வழங்குவதற்காக அதன் இன்னொரு சேவையாகிய மாலை நேர பதிப்புக்களை பசுமை ஊடக இல்லம் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் ஊடாக வெளியிட்டுவருவது போற்றுதற்குரியது.

இம் மாலைப் பத்திரிகை வெளிவரத் தொடங்கி இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்து மூன்றாம் வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்ற இந்த நல்ல தினத்தில் அதன் பத்திரிகைக் குழாமை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பத்திரிகைகள் பக்கச்சார்பின்றி உண்மையான செய்திகளையும் மக்களை விழிப்படையச் செய்வதற்கான செய்திகளையும் உடனுக்குடன் வழங்க வேண்டும். அந்த விதத்தில் நீண்டகால பத்திரிகைத்துறை அனுபவத்தினாலும் சிறந்த பத்திரிகையாளர்களின் வழிகாட்டலில் வளர்ந்த காரணத்தினாலும் திரு.வித்தியாதரன் அவர்களின் எழுத்துக்கள் என்றும் ஒரு தனித்துவமான தன்மையைக் கொண்டிருக்கின்றமையை காணக்கூடியதாக இருக்கின்றது.

பிரதம ஆசிரியரின் தொகுப்பு முந்திய காலங்களில் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திற்கு ஒத்ததாக மக்களால் உணரப்படுவதை இத்தருணத்தில் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

காலைக்கதிர் பத்திரிகை மற்றும் மாலைநேரப் பதிப்பு மேலும் சிறப்புறவும் இவர்களின் பத்திரிகைப்பணி தொடரவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன். – என்று அமைந்தது.












# மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

# நிறைவான மக்கள் சேவையுடன் மூன்றாம் ஆண்டில் காலடி வைக்கும் காலைக்கதிர் மாலைப் பத்திரிகை!

## யாழ். பல்கலை துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா பாராட்டு

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா காலைக்கதிர் மாலைப் பத்திரிகையின் சேவையைப் பாராட்டி அனுப்பி வைத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளவை வருமாறு:–

தமிழர்களின் தனித்துவ அடையாளங்களில் ஒன்றாக வெளிவரும் காலைக்கதிர் பத்திரிகையின் மாலைப்பதிப்பு வெளிவரத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கின்றன. பசுமை ஊடக நிறுவனத்தின் முகாமையில் புதிய பரிமாணம் பெற்று மூன்றாவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கும் இந்த நேரத்தில் எனது வாழ்த்துக்களைப் பதிவு செய்வதில் பெருமகிழ்சி அடைகிறேன்.

உலகையே முடக்கும் அளவுக்கு கொரோனா ஊழித் தாண்டவம் ஆரம்பித்த நேரத்தில் மாலைப் பதிப்பு வெளிவரத் தொடங்கியிருந்தமை அனைவரும் அறிந்ததே. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், மாலைப்பதிப்பு வெளிவந்த சில நாள்களிலேயே அச்சு ஊடகங்கள் முடங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த நேரத்தில் காலைக்கதிர் தனது இரண்டு பதிப்புகளை மின்னிதழ் வடிவில் வெளியிட்டு வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்தமை பாராட்டுக்குரியது.

செய்தி, கட்டுரைகள், சர்வதேச விவகாரங்கள், பல்சுவை அம்சங்கள் என மக்களுக்குத் தேவையான சகல விடயங்களையும் தாங்கி – நிறைவான சேவையுடன் – பத்திரிகை வெளிவருவதற்காகப் பாடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

ஈழத்து இதழியல் பரப்பில் இலத்திரனியல் விநியோகத்தில் காலைக்கதிரின் மாலைப்பதிப்பு தனக்கெனத் தனியிடம் ஒன்றினைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. பத்திரிகைகள் எவையும் அச்சு வடிவத்தில் வெளிவர முடியாத காலத்தில் கூடத் தினமும் – காலையும் மாலையும் – வீடுகளில் இருந்தவாறே உலக நடப்புகளை அறிந்து கொள்வதற்கு காலைக்கதிர் பெரும் பங்காற்றியிருக்கிறது – பங்காற்றி வருகிறது – என்றால் அது மிகையல்ல. தற்போது நாட்டில் எழுந்துள்ள பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அச்சுத் தாள்களுக்கான தட்டுப்பாடொன்று உருவாகியிருக்கும் இந்த நேரத்தில், பத்திரிகைகளை அச்சு வடிவில் வெளியிடுவது சவாலாதொரு பணியாகவே பார்க்கப்படுகிறது. எனினும் காலைக்கதிர் ஆரம்பித்து வைத்த இலத்திரனியல் பகிர்வுக் கலாசாரம் – மின்னிதழ் வடிவப் பத்திரிகையின் – வாயிலாக எமக்கு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

வாசகர்களுக்குத் தேவையான விடயங்களைத்



தேவையான நேரத்தில், தேவையான வடிவத்தில் தருகின்ற காலைக்கதிர் பத்திரிகை மென்மேலும் வளர்ந்து வியாபிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன். காலைக்கதிர், இன்று போல என்றும் – என்றென்றும் – தன் கதிர்பரப்பி ஒளி வீச எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.









# மூன்றாம் ஆண்டில் ‘காலைக்கதிர்’ மாலை இதழ்

# மக்களை நேர்வழியிலே அழைத்துச் செல்லும் பணியை காலைக்கதிர் திறம்பட கையாள்கிறது

## மனம் திறந்து பாராட்டுகின்றார் அங்கஜன் இராமநாதன் எம்.பி.



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் வாழ்த்துச் செய்தியை அவரது ஊடகப் பிரிவு அனுப்பி வைத்தது. அதில் காலைக்கதிர் குறித்து பின்வருமாறு மனம் திறக்கின்றார்:–

யாழ் குடாநாட்டு ஊடகப் பரப்பில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துவைத்திருக்கும் காலைக்கதிர் ஊடகம், தனது மாலைப்பதிப்பின் மூன்றாவது வருடத்தில் அடியெடுத்து வைப்பதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

குடாநாட்டு பத்திரிகை வரலாற்றில் நீண்ட கால அனுபவத்தை கொண்டவரது நெறிப்படுத்தலில் இயங்கி வரும் காலைக்கதிர், அன்றாட செய்திகளை உடனுக்குடன் வாசகர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற நோக்கோடு மாலை நேரப் பதிப்பை வெளியிடுவது தற்காலச் சூழலுக்கு பொருத்தமான ஊடக அணுகு முறையாகும்.

ஜனநாயகத்தின் பலமான தூணாகிய ஊடகம், விமர்சனங்களை கட்டமைக்கும் கருத்துருவாக்கியாக செயற்படாமல் மக்களை நேர்வழியில் அழைத்துச்செல்லும் பணியை ஆற்றவேண்டியது அவசியமானது. சம கால ஊடக வெளியில் இப்பணியானது மிகுந்த சவால் மிக்கது. அதை காலைக்கதிர் திறம்பட கையாண்டு வருகிறது.

தனக்குரிய தனியான வாசகர் வட்டத்தோடு தனித்துவமாக செயற்பட்டு வரும் காலைக்கதிர் பத்திரிகையின் மாலைப்பதிப்பு, தமிழ் மக்களுக்கு நேர்மையான, பக்கசார்பற்ற செய்திகளை வழங்கி இன்னும் பல்லாண்டுகள் ஊடகப்பரப்பில் உலாவர வாழ்த்துகின்றேன். – என்றார்.












## மூன்றாம் ஆண்டில் ‘காலைக்கதிர்’ மாலை இதழ்

# நடுநிலையோடு முதல் தரச் செய்திகளை நம்பகமாகத் தாங்கிவரும் காலைக்கதிர்

## சிறிதரன் எம்.பி. மனநிறைவோடு வாழ்த்து



‘காலைக்கதிரின் மாலைப்பதிப்புக்கு அகவை இரண்டு’ என்ற தலைப்பில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தி வருமாறு:–

பசுமை ஊடக நிறுவனம் காலைக்கதிர்ப் பத்திரிகையைப் பொறுப்பேற்றதன் பின்னர், மின்னிதழாக வெளிவர ஆரம்பித்த காலைக்கதிரின் மாலைப்பதிப்பு, இரண்டு வருடங்களை எட்டிப் பிடித்திருப்பது மன நிறைவளிக்கிறது.

அச்சிதழாக வெளிவர ஆரம்பித்த சில இதழ்களே தொடர்ந்து வெளிவர முடியாது தடுமாறும் இன்றைய காலச்சூழலைக் கடந்து, தனக்கென்றோர் தனியான வாசகர் வட்டத்தைத் தக்கவைத்திருக்கும் சமநேரத்தில், நடுநிலைத் தன்மையோடு முதல் தரச் செய்திகளையும், பல்சுவை அம்சங்களையும் தாங்கி வெளிவரும் இம்மின்னிதழ், தன்னிலை நின்று தரம் தாழாது, மக்கள் மனங்களை வென்றதோர் ஊடகமாக இனியும் தன் பணி தொடரும் என்று நம்புகிறேன்.

வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தைத் தளமாகக்கொண்டு வெளிவரும், காலைக்கதிரின் மாலைப்பதிப்பு, எதிர்வரும் இடர்களை எல்லாம் கடந்து, நடுநிலையும், நம்பகத்தன்மையும் நிறைந்த இதழாக, ஆண்டுகள் பல கடந்து, நெறிபிறழா ஊடகப் பாதையில் தொடர்ந்தும் வெளிவர, அதன் அகவைநாளில் மனதார வாழ்த்தி நிற்கிறேன்.










MK COLLECTION
இல.05, புதிய சந்தை, நெல்லியடி.
076 372 1279


இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A
பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500


சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247/ 077 614 0361
கிளை நிறுவனங்கள்
மல்லாகம் T.P: 021 224 3393 070 301 3014 077 343 6622
பண்டத்தரிப்பு T.P: 021 225 2333 071 255 4135 077 434 3798
சங்கானை T.P: 021 225 1664 070 301 3016 077 434 3149
சாவகச்சேரி T.P: 021 227 0616 071 577 0616 077 435 3995
காரைநகர் T.P: 021 225 2454 070 510 2484
நெல்லியடி T.P: 021 226 0999 071 755 0999 077 261 2446
யாழ் மத்தி (Town) T.P: 021 222 8004 070 301 5004 070 301 3017 077 998 6247
புன்னாலைக்கட்டுவன் T.P: 021 224 5001 076 384 0684 077 934 6509
வேலணை T.P: 021 221 5472 070 301 3012
email:- sasikadrivingschool@gmail.com
web:- sasikalearners.com


யாழ் சிமாட்
வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனி
இலவச நீர் பரிசோதனையுடனும், மிகக் குறைந்த விலையிலும், அதிகபட்ச உத்தரவாதத்துடனும், எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும், வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும், 24 மணித்தியாலத்தினுள் முறைப்பாடு திருத்திக்கொடுத்தல்.
Yarl Smart PARTY
"happy home, happy life"
Cutting Sticker
Birthday Cakes
Party Smoke Machine
Party Bubbles Machine
Balloon Decoration
Dj Music
Surprise Gift
Lighting Decoration
Artificial Flowers Decoration
Surprise
Gifts & Dancing
YARL SMART (Pvt) Ltd.
"Smart Water, Smart Life"
No.341 K.K.S Road, Jaffna.
021 430 0044, 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com
SCAN ME

**Director, Jaffna College Institute of Technology Calls for the following courses**

## Civil Draughtperson (one year)

Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English

**Course leads to:**

- Follow courses in level 5
- Register for drawings at local councils

## Computer Certificate Courses
(3 - 4 months Part time)

- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

## Foundation in Information Technology
(FIT) (6 months part time)

Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

**Commencement in the 2nd week of March 2022**
**The Courses will be conducted at our Jaffna Centre too**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road, Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975021222382**
**Email: ejcitsltnet.lk.**




## ENGLISH CLASSES

யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும் திருத்தப்படும்.



**K.Ganesh B.A . 077 7668725**




Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

**காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000**

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# சயன்ஸ் அக்கடமி

நல்லூர், முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை.
தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அ.கிருபாகரன் -அதிபர்-
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறைக் கட்டணங்கள்.
இரவிலும் வாகன பயிற்சிகள்.
NP L 2222
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777


யாழ் மக்களின் நம்பிக்கைக்குரிய ஜவுளி மாளிகை
சிவகணேசன் புடவையகம்
Sivakaneshan Textiles
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
021 222 2063


இளவரசி
சேலைச்சோலை
பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்
ELAVARASI TEXTILES
125, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0094777315087,0212222503,
0094768079080
Vehicle Parking Available
Master Gacr Greadit Card Accepted


SAI CLEANING &
KIDS WORLD
பிரதான வீதி, பருத்தித்துறை.
077 296 9830




# மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்
















## மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

# தமிழர் நலனுக்கு விரோதமாக செயற்படுவதல்ல-காலைக்கதிர்


பக்கங்கள்: 12
காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 05 புதன்கிழமை 18.03.2020 கதிர் 01
வேட்புமனுத் தாக்கல் முடிந்ததும்
இரு வாரங்களுக்கு நாடு முடக்கப்படும்!
இரும்புக் கைகொண்டு கொரோனாவை அடக்கத் தயாராகிறது கோட்டா அரசு
கொழும்பு, மார்ச்18
அ றிவிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நடைமுறைகள் பூர்த்தியானதும், முழுநாட்டையும் இரண்டு வாரங்களுக்கு ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் முடக்கி (Lock Down) கொரோனா பரவலை இலங்கை...
மூர்க்கத்தனம் மிக்க நடவடிக்கை கொரோனாவை தடுக்க அவசியம்
இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை
கொழும்பு, மார்ச் 18

## நேர் - எதிர் விமர்சனங்கள் அதனை வழிப்படுத்தும்

**சி.நடனராஜா - (கோண்டாவில்)**

இன்றைய நவீன உலகத்தில் ஊடகங்கள் பல்வேறுவிதமான புதிய வடிவங்களையும் பரிணாம மாற்றங்களையும் எடுத்து வருகின்றன. டிஜிற்றல் தொழில் நுட்பத்தில் பல்வேறு புதிய ஊடக வடிவங்களை நாங்கள் பார்க்கவும் கேட்கவும் முடிகிறது. அதையும் தாண்டி ஊடகங்களை உணரக் கூடிய வழிமுறையும் இப்போது உருவாகி இருக்கிறது.

செய்திகளையும் தகவல்களையும் விரைந்து வழங்குவதற்கு மிக வேகமான ஊடகப் பணிகளைச் செய்கின்ற நிறுவனங்களை நாங்கள் சந்தித்து வருகிறோம். நொடிக்கு நொடி புதிய செய்திகளை பரிமாறும் இத்தகைய ஊடகங்களோடு பாரம்பரிய ஊடகங்கள் போட்டி போடுவது மிகக் கடினமான பணியாகத்தான் இருந்து வருகிறது. ஆனாலும், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற பாரம்பரிய ஊடகங்களின் தேவையும் இன்றும் மக்களுக்கு இருந்தே வருகிறது.

அப்படியானால் நவீன வடிவிலான ஊடகங்களோடு இத்தகைய பாரம்பரிய ஊடகங்களால் எவ்வாறு போட்டி போட முடியும்? அதற்கான ஒரே வழிமுறை இந்த பாரம்பரிய ஊடகங்களும் நவீன தொழில்நுட்பத்தை காலத்துக்கு ஏற்ற வகையில் தமக்குள் உள்வாங்கிக் கொண்டு செயல்படுவதேயாகும். அதனை இன்று சில ஊடக நிறுவனங்கள் செய்து வந்தாலும், கடந்த சில வருடங்களில் காணாமல் போயிருக்கின்ற பல ஊடக நிறுவனங்களை எடுத்துப் பார்த்தால் அவை இத்தகைய பரிணாம மாற்றங்களை தமக்குள்ளே வாங்க மறுத்த, அல்லது மறந்த, அல்லது தவறவிட்டு கொண்டவர்களாகவே நாம் அடையாளப்படுத்த வேண்டியிருக்கிறது.

இந்த ஒரு நீண்ட முன்னுரையை நான் இந்த வேளையிலே முன்வைப்பதற்கான அடிப்படை காரணம் என்னவென்றால், தற்போது தன்னுடைய மூன்றாவது ஆண்டிலே நுழைகின்ற காலைக்கதிர் பத்திரிகையின் மாலை பதிப்பானது டிஜிற்றல் வடிவில் உலகளாவிய ரீதியில் மிகவும் பிரபலமான ஒன்றாக காணப்படுகிறது. அச்சு ஊடகமாக, ஒரு பாரம்பரிய ஊடகமாக ஆரம்பிக்கப்பட்ட காலைக்கதிர் பத்திரிகை இப்போது காலை மற்றும் மாலை பாதிப்புகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது.

காலை, மாலை என இரண்டு நேரத்துக்கும் அதற்கான தேவை என்ன என்ற கேள்வியை பலரும் முன் வைக்கலாம். காலையிலே பல பத்திரிகைகள் இலங்கையில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இது உங்களுக்கும் தெரியும். அப்படியான ஒரு சூழ்நிலையில் மாலைப் பதிப்பு என்பது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஒரு புதிய முயற்சியும் அல்ல. ஏற்கனவே இப்படியான மாலைப் பதிப்புகள் வெளிவந்து இருக்கின்றன. அவை மக்கள் மத்தியில் பிரபலமும் பெற்று காணப்பட்டிருக்கின்றன. ஆயினும் அது டிஜிற்றல் வடிவில் வருவதென்பது ஒரு புதிய முயற்சிதான்.

அதிலும், புலம்பெயர் தேசத்திலே இருக்கக்கூடிய நம்முடைய தமிழ் உறவுகளுக்கு இலங்கைக்கும் அவருடைய நேரத்துக்குமான இடைவெளி என்பது ஒரு சராசரியாக 5 மணித்தியாலங்கள் என்று வைத்துக் கொண்டால் அந்தக் காலப்பகுதிக்கான செய்திகளையும் உள்ளடக்கி அயல் நாடான இந்தியா, ஏனைய உலக நாடுகள், அதுபோல விளையாட்டுச் செய்திகள், கட்டுரைத் தொகுப்புகள் போன்றவற்றையும் தாங்கி ஒரு பூரணமான மாலை பத்திரிகையாக, தொடர்ச்சியாக வெளிக்கொண்டுவருவது மிகவும் சிரமத்துக்கு உரிய பணியாகத்தான் பார்க்கவேண்டும். அத்தகைய பணியை சீரிய முறையில் தொடர்ச்சியாக காலைக்கதிர் பத்திரிகை செய்து வருகிறது.

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடியவர்கள் டிஜிற்றல் பத்திரிகையை படிப்பார்களா என்று ஒரு கேள்வி ஆரம்பத்திலே அதிகமாக பலராலும் எழுப்பப்பட்ட ஒரு கேள்வியாக இருந்தது. எனக்கும் அத்தகைய சந்தேகம் எழுந்திருக்காமலில்லை. ஆனால், எந்த ஒரு சமூகமும் கால மாற்றத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை நிச்சயமாக இருக்கிறது. அது விரும்பியோ விரும்பாமலோ நடைமுறையில் கொண்டுவரப் படத்தான் போகிறது. எனவே, அதை உணர்ந்து முன் கூட்டியே அதற்கான தேவைக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கிக் கொள்வதென்பது மிகச்சிறப்பான ஒரு எதிர்கால நோக்கு சிந்தனையாகவே பார்க்கப்பட வேண்டும்.

இதன் பின்னணியில் பல காரணங்கள் இருக்கலாம். ஒரு பத்திரிகையை டிஜிற்றல் பதிப்பாக கொண்டு வருவதற்கும் அதைப் பதிப்பித்து வாசகர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கும் நிறைய மேலதிக வசதிகள் தேவைப்படுகின்றன. அதற்காக டிஜிற்றல் பதிப்பில் பணிகள் குறைவாக இருக்கும் என்றும் நாங்கள் எதிர்பார்க்க முடியாது.

அச்சுப் பதிப்பில் அச்சுக்கு செல்வதற்கு ஒரு குறித்த நேர எல்லை இருக்கும். அதற்கு முன்னதாக பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டியது ஆசிரியபீடத்தினதும், வடிவமைப்பு பகுதியினரும் பொறுப்பாக இருக்கும். டிஜிற்றல் பதிப்பை பொறுத்தவரையிலே அது வெளிவருகின்ற இறுதி நேரம் வரைக்கும் செய்திகளை கொடுக்கக் கூடிய வாய்ப்பு ஆசிரியபீடத்துக்கு இருந்தாலும் அது அதிகமான அழுத்தங்களை அவர்களுக்கு ஏற்படுத்தும்.

ஒரு செய்தி பிரசுரமாகி அது அச்சாகிகொண்டிருக்கிற வேளையில் அதில் ஏதாவது மாற்றங்கள் வருமாக இருந்தால், புதிய தகவல்களை உள்ளடக்க வேண்டுமாக இருந்தால் பதிப்பித்த தாள்களை அப்படியே வைத்துக்கொண்டு, மீளவும் பத்திரிகையை ஒழுங்கமைத்து அதை அச்சுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இதில் நகரப் பதிப்பு, வெளி மாவட்டங்களுக்கான பாதிப்பு என்று இரு வகையான பதிப்புகளை தேசியப் பத்திரிகைகள் வெளியிடுவது வழக்கம். காரணம், நகரத்திலே அதற்கான விநியோகத்திற்கான நேர அவகாசம் சற்று அதிகமாக கிடைக்கும் என்பதால் பிந்திய செய்திகளையும் பதிப்பித்து தனியான ஒரு பதிப்பாக அந்த பத்திரிகையை கொண்டு வருவர். ஆனால், அது மேலதிகமான ஒரு அழுத்தத்தை பத்திரிகை நிர்வாகத்துக்கும் ஆசிரியபீடத்துக்கும் வழங்கும். ஆனால், அதற்கு அவர்கள் பழகிக்கொண்டிருப்பர்.

அதுபோலத்தான் டிஜிற்றல் பத்திரிகை பதிப்பு அனைவருக்கும் அனுப்புவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில் கூட செய்திகளில் புதிய மாற்றங்கள் வரலாம். பிரதான தலைப்புச் செய்தியைக் கூட மாற்ற வேண்டிய தேவை ஏற்படலாம். வழக்கமாக பத்திரிகையை பிரசுரித்து அனுப்புவதற்கான நேரத்தை நெருங்குவதற்கு ஐந்து நிமிடம் தான் இருக்கும் வேளையில் கூட பத்திரிகையிலே மாற்றத்தைச் செய்ய வேண்டிய அழுத்தம் இந்த டிஜிற்றல் பதிப்புகளில் நிச்சயமாக இருக்கப்போகிறது. எனவே, இத்தகைய அழுத்தங்கள் எல்லாவற்றையும் கடந்து ஒரு பத்திரிகை வெற்றிகரமாக மாலைப் பதிப்பாக இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக வெளிவருகிறது என்பது சிறப்பான ஒரு நிலைதான்.

அதிலும் கொரோனாப் பாதிப்பு போன்ற மிக இக்கட்டான சூழ்நிலைகளில் மக்கள் வெளியே வர முடியாத காலகட்டத்தில் காலைக்கதிரின் பணி மெச்சத்தக்கதாக இருந்தது. பணிகளுக்கு ஊழியர்களைக் கொண்டு வருவதாக இருக்கட்டும், பத்திரிகைகளை அச்சிட்டு வாசகனிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது, வாசகர்கள் அந்த பத்திரிகையை சென்று வாங்கிக் கொள்வது போன்ற அத்தனை கட்டமைப்புகளும் சீர்குலைந்து கிடந்த காலகட்டமது. ஓரிரு நாள்களுக்கு அல்ல, மாதக்கணக்கில், வருடக்கணக்கில், தொடர்துன்பமாக இருந்த காலப்பகுதியிலே வெற்றிகரமாக, தொடர்ச்சியாக வெளிவந்த ஒரு பூரணமான டிஜிற்றல் பத்திரிகையாக காலைக்கதிர் பத்திரிகையைச் சொல்லலாம்.

(13ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்

# தமிழர் நலனுக்கு விரோதமாக செயற்பட்டதில்லை காலைக்கதிர்


காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 05 புதன்கிழமை 18.03.2020 கதிர் 01
வேட்புமனுத் தாக்கல் முடிந்ததும்
இரு வாரங்களுக்கு நாடு முடக்கப்படும்!
மூர்க்கத்தனம் மிக்க நடவடிக்கை கொரோனாவை தடுக்க அவசியம்
இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை
இரும்புக் கைகொண்டு கொரோனாவை அடக்கத் தயாராகிறது கோட்டா அரசு
கொழும்பு, மார்ச் 18

## நேர் - எதிர் விமர்சனங்கள் அதனை வழிப்படுத்தும்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை, மாலை என இரண்டு பதிப்புகளும் தொடர்ச்சியாக வெளிவந்து, இலங்கையில் இருக்கக் கூடியவர்களுக்காக மட்டுமல்ல கடல் கடந்து புலம் பெயர் தேசங்களிலும் இருக்கக்கூடிய நம்முடைய உறவுகள் அத்தனை பேருக்கும் இந்தப் பத்திரிகை மிகப்பெரிய ஒரு சேவையைச் செய்தது. அந்தக் கால கட்டத்திலே மட்டுமல்ல தொடர்ச்சியாக செய்தும் வருகிறது.

காலைக்கதிரின் உள்ளடக்கம் அதாவது செய்திகள், கட்டுரைகள், ஆசிரியர் எழுதுகின்ற பத்திகள் போன்றவற்றை தொடர்ச்சியாக வாசித்து வரக்கூடிய ஒரு வாசகனாக அவற்றில் பல்வேறு விமர்சனங்கள் எனக்கும் உள்ளன. உங்களில் பலருக்கும் அவை இருக்கலாம். அந்த செய்திகளின் உள்ளடக்கங்கள் என்ன? அவை எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பிரசுரிக்கப்படுகின்றன? - போன்ற கேள்விகளும் பலருக்கு எழலாம். எனக்கும் அந்த கேள்விகள் உண்டு.

குறிப்பாக தமிழர் அரசியல் சார், தமிழர் நலன் சார் செய்திகளும் கட்டுரைகளும் படைப்புகளும் வருகிறபோது அது எந்த ஊடகமாக இருந்தாலும் அவற்றை சந்தேகக் கண்ணோடு பார்க்க வேண்டிய ஒரு கால கட்டத்திலே நாங்கள் இருக்கிறோம். ஆனால் அவற்றுக்கான விமர்சனங்களை முன்வைக்கக்கூடிய தளத்தை இந்தப் பத்திரிகை அனைவருக்கும் வழங்குகிறது என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக சமூக ஊடகங்களான பேஸ்புக், வட்ஸ் அப், வைபர் போன்ற தளங்களில் இந்தப் பத்திரிகை மீதான நேர் எதிர் விமர்சனங்கள் பலவற்றை நாங்கள் பார்க்கிறோம். அவை இந்த பத்திரிகையை மேம்படுத்துவதற்கான ஊக்கத்தை நிச்சயமாக அளிக்கும்.

பல இடங்களில் காலைக்கதிரின் செய்திகள் தனித் தனி துண்டுகளாக கத்திரிக்கப்பட்டு பகிரப்படுவதை நாங்கள் பார்க்கிறோம். நானும் கூட பகிர்ந்திருக்கிறேன். ஒரு செய்தி அல்லது கட்டுரை அல்லது படைப்பின் மீது விமர்சனம் வருகிறபோதுதான் அவற்றை உள்வாங்கி, தன்மை மேம்படுத்திக்கொண்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியும். அதே நேரத்தில் அது பிரசுரிக்கப்பட்ட நோக்கமும் அங்கே நிறைவேறுவதாகவும் நாங்கள் கொள்ளலாம்.

காலைக்கதிர் பத்திரிகையின் பார்வை எத்தகைய தன்மையை கொண்டிருக்கிறது, எந்த நோக்கத்தோடு அது நகர்கிறது, தன்னுடைய ஊடகப் பணியை செய்கிறது என்கிற அடிப்படையான கேள்விகளுக்குப் பதிலைத் தேடுகையில், அதற்கான பதிலைக் குறிப்பாகச் சொல்ல முடியாதிருக்கிறது என்றாலும் கூட, செய்திகளைத் திரிவுபடுத்தி, தமிழர் நலனுக்கு விரோதமான செயற்பாட்டினை அது ஒருபோதும் செய்ததில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

காலைக்கதிரின் காலைப் பதிப்பு ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்திலிருந்து தொடர்ச்சியாக வாசித்து வரும் வாசகனென்கிற ரீதியில், தமிழர் அரசியல் பரப்புக்குள் சில தரப்பின் செய்திகளுக்கு முன்னுரிமையும், சில தரப்புகளுக்கு முக்கியத்துவமற்ற இடத்தினையும் இந்தப் பத்திரிகை வழங்கியிருக்கிறதென்பது வெளிப்படையானது. அதை வெளிப்படையாகவே இந்தப் பத்திரிகை செய்திருக்கிறதென்பதைப் பாராட்டலாம். அதேவேளை, அது ஒரு முறையான வழிமுறையல்ல என்பதையும் சுட்டிக்காட்டிட வேண்டும்.


அண்மைய காலகட்டத்தில், அந்த நிலைப்பாட்டில் சில மாற்றங்களை அவதானிக்கிறேன். தமிழர் நலன் சார்ந்து செயற்படும் தரப்பினருக்கு அவசியமான இடத்தினை முன்னர் போன்று ஆள் பார்த்துக் காய் நகர்த்தாது காலைக்கதிர் வழங்குகிறது. இது ஒரு முக்கியமான மாற்றமும் முன்னேற்றமுமாகும். புதிய நிர்வாகத்தின் நிலைப்பாடாகவும் இதைக் கருத இடமுண்டு.

காத்திரமான செய்திகளையும் படைப்புகளையும் தாங்கிவரும் காலைக்கதிர், தன்னிலிருக்கும் குறைகளைக் களைய முயல்கிறது என்பதை நீண்டநாள் வாசகனாக அடையாளப்படுத்திக் கொள்கிறேன். இது தொடருமாக இருந்தால், அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி இப்பத்திரிகை நகர்வது - வேகமெடுப்பதோடு தமிழ் மக்களின் பூரண நம்பிக்கைக்குரிய பத்திரிகையாகவும் காலைக்கதிர் மிளருமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

வாழ்த்துகள்!



# அரசு பள்ளி மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபா நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்




தமிழக அரசின் 2022-2023ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் இன்று தாக்கல் செய்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசின் 2ஆவது காகிதம் இல்லாத பட்ஜட்டை தாக்கல் செய்த பின், நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் உரை நிகழ்த்தினார். அப்போது பேசிய அவர், 'தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கை மிகக் குறைவாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் என மாற்றியமைக்கப்ப டுகிறது.

இதன் மூலம், அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு / தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை, மாதம் 1,000 ரூபா அவர்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும். இந்த மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித் தொகை பெற்று வந்தாலும், இத்திட்டத்தில் கூடுதலாக உதவிபெறலாம். இத்திட்டத்தின் மூலம், சுமார் ஆறு லட்சம் மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெற வாய்ப்புள்ளது.

இந்தப் புதிய முன்முயற்சிக்காக, வரவுசெலவுத் திட்டத்தில் 698 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு வறிய நிலையில் உள்ள விதவையரின் மகள்களின் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்கள் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்து செயல்படுத்தப்படும்,' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மேலும், 'இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்நிறுவனங்களில் இளநிலைப் பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கும். 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றுள்ள மாணவர்கள் இந்த உதவியைப் பெறலாம்,' என்று கூறினார்.

# பட்ஜட்டில் அறிவிக்கப்பட்டுள்ள கல்விக்கான திட்டங்கள் நன்று

## ராமதாஸ், தினகரன், வைகோ உள்ளிட்டோர் பாராட்டு



தமிழ்நாடு அரசின் 2022-23ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கல்விக்கான திட்டங்கள் வரவேற்கத்தக்கவை என்று பா.ம.க.நிறுவுனர் ராமதாஸ் வரவேற்பு தெரிவித்திருக்கிறார். தனியார் பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள், அரசு பள்ளிகளுக்கு மாறி வரும் நிலையில், பள்ளிக் கல்வித்துறைக்கான ஒதுக்கீடு ரூ.32,599 கோடியில் இருந்து, ரூ.36,895 கோடியாக உயர்த்தப்பட்டிருப்பது மிகவும் சரியான நடவடிக்கை என்றும் ராமதாஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை மக்கள் நல அரசு என்பதற்கு சான்று என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வரவேற்பு தெரிவித்திருக்கிறார். ரூ.7,000 கோடிக்கு மேல் தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை குறைய உள்ளது என்பது பாராட்டுக்குரியது என்றும் வைகோ தெரிவித்துள்ளார்.

கடுமையான நிதி நெருக்கடியிலும் மக்கள் சார்ந்த, மண் சார்ந்த, மொழி சார்ந்த, விவசாயிகள் நலன் சார்ந்த அறிவிப்புகளை நிதியமைச்சர் வெளியிட்டிருக்கிறார் என்று வேல்முருகன் தெரிவித்திருக்கிறார். சமூகநீதி, சமத்துவம், சாதி ஒழிப்பு, பெண்ணுரிமை என்ற கொள்கை பிடிப்பில், அயோத்திதாசர், வைகுண்டர், வள்ளலார் போன்றவர்களும் இருந்துள்ளனர். அவர்களின் கொள்கையை பேச்சுக்களை தொகுத்து அச்சு டிஜிற்றல் வழியில் வெளியிட வேண்டும் என்றும் வேல்முருகன் குறிப்பிட்டிருக்கிறார்.

பெரியாரின் சிந்தனைத் தொகுப்பு, 21 உலக மொழிகளில் ரூ.5 கோடி செலவில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளாக வெளியிடப்படும் என்கிற அறிவிப்பு தமிழகத்தின் பெண்ணுரிமை, சமூகநீதி, சுயமரியாதை வரலாற்றை இந்தியாவெங்கும் எடுத்துச்செல்லும் சிறப்பான முயற்சிக்கு எனது பாராட்டுக்கள் என்று தமிழ்நாடு பட்ஜட் 2022-23 குறித்து காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி கருத்து தெரிவித்துள்ளார். பெரியாரின் சிந்தனைகள் 21 இந்திய மொழிகளில் புத்தகமாக வெளியிட ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்திருக்கிறார்.

அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்விக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பு பாராட்டுக்குரியது என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.



# காங்கிரஸ் கட்சித் தலைமை கூட்டா ? ஒற்றையா ?

கட்சிக்கு கூட்டு தலைமை வேண்டும் என வலியுறுத்தி வரும் காங்கிரஸ் அதிருப்தி தலைவர்களின் ஆலோசனை கூட்டம் 24 மணி நேரத்தில் 2 முறை நடைபெற்றதால் டெல்லி அரசியல் களத்தில் பரபரப்பு ஏற்பட்டது. உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 5 மாநில சட்டப் பேரவை தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியை சந்தித்தது. இது குறித்து விவாதிப்பதற்காக கூடிய காங்கிரஸ் செயற்குழு சோனியா காந்தி, ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா ராஜினாமா செய்ய முன்வந்ததமையை நிராகரித்தது. இந்நிலையில் ஜி 23 என அழைக்கப்படும் தலைவர்கள், குலாம் நபி ஆசாத் தலைமையில் தனியாக கூடி தேர்தல் தோல்வி குறித்து விவாதித்தனர்.

இந்த கூட்டத்தில் புதிதாக சில காங்கிரஸ் தலைவர்களும் கலந்துகொண்டமை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. கூட்டத்தின் முடிவில் அதிருப்தி தலைவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் காங்கிரஸ் கட்சிக்கு கூட்டு தலைமை வேண்டும் என வலியுறுத்தினர். அதிருப்தியாளர்கள் கூட்டத்தில் ஹரியானா முன்னாள் முதலமைச்சர் பூபேந்தர் சிங் ஹூடா ராகுல் காந்தியை சந்தித்து பேசினார். இருவரும் பேசிய பிறகு குலாம் நபி ஆசாத் வீட்டிற்கு சென்று அவரையும் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார். இந்நிலையில் டெல்லியில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளை சந்திக்க சோனியா காந்தி தயாராக உள்ளார் என்றார்.

ஆனால் அவருக்கு நெருக்கடி கொடுப்பதை ஏற்க முடியாது என அவர் கூறினார். இதனிடையே காங்கிரஸ் அதிருப்தி தலைவர்கள் குலாம் நபி ஆசாத் வீட்டில் 2ஆவது முறையாக நேற்று மாலை கூடி ஆலோசனை நடத்தினர். இந்த கூட்டத்தில் பூபேந்தர் சிங் ஹூடா பங்கேற்றார். ராகுல் காந்தியை சந்தித்தது பற்றியும் அவரின் கருத்துக்கள் பற்றியும் ஹூடா தலைவர்களிடம் பகிர்ந்து கொண்டார் என கூறப்படுகிறது. சோனியா காந்தி ஒப்புதல் அளித்தமையும் அவரை சந்தித்தமை கட்சியில் உள்ள பிரச்சினைகள் பற்றி முறையிட அதிருப்தி தலை வர்கள் முடிவு செய்யாதிருக்கின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.



# உக்ரைனில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க நடவடிக்கை!

உக்ரைனில் சிக்கியுள்ள 50 இந்தியர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதற்கான வழிகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம் என வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை 22 ஆயிரத்து 500 இந்தியர்கள் உக்ரைனில் இருந்து மீட்கப்பட்டனர் எனவும் 18 நாடுகளைச் சேர்ந்த மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் இந்திய விமானங்கள் மூலமாக அழைத்து வரப்பட்டிருக்கின்றனர் எனவும் மத்திய அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஏறாவூர் தமிழ்ப் பிரிவில் புதிய நூலகக் கட்டடம்

## அடிக்கல் நாட்டப்பட்டது

மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபைக்குட்பட்ட ஏறாவூர் தமிழ்ப் பிரிவில் சுமார் ஒரு கோடியே 60 லட்சம் ரூபா செலவில் முழு வசதிகள் கொண்ட நூலகக் கட்டடம் ஒன்று ஏறாவூர் நகர சபையின் முயற்சியில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.ஐ,எம். நளீம் ஏறாவூர் பற்று பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வழங்கிய அனுமதியின் பேரில் இந்த புதிய நூலகக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த கட்டடத்திற்குரிய அடிக்கல் நாட்டும் வேலைகள் வைபவ ரீதியாக இடம்பெற்றன. இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சம்பிரதாயபூர்வமாக அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி தவிசாளர் மொகமத் ரகுபாசம் உள்ளிட்ட ஏறாவூர் நகர சபையின் உறுப்பினர்கள் மற்றும் இந்து ஆலயங்களின் தலைவர்கள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர் .

இரு மாடிகளைக் கொண்டதாக நிறுவப்பட உள்ள இந்த புதிய நூலகக் கட்டடத்தில் நூலகம் சார்ந்த பல்வேறு நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன என தவிசாளர் நளிம் தெரிவித்தார்.

தவிசாளர் மேலும் கருத்து வெளியிடுகையில் இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்க்கும் நோக்கில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் பெரிதும் உதவுகின்றன என தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இங்குகருத்து வெளியிடுகையில், இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்க்கும் நோக்கில் ஏறாவூர் நகர சபையினர் இந்த நூலகக் கட்டடத்தை தமிழ்ப் பிரதேசத்தில் அமைக்க முன் வந்தமையைத் தான் மிகவும் பாராட்டுகிறேன் எனத் தெரிவித்தார்.

# வீட்டின் மாடியில் கஞ்சாச் செடி பூச்சாடியில் வளர்த்தவர் கைது





(பாறுக் ஷிஹான்)

வீடு ஒன்றின் மூன்றாவது மாடியில் இரண்டு கஞ்சா செடிகளை வளர்த்து வந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மலையடிக் கிராமத்தில் இரகசியதகவல் ஒன்றை அடுத்து பொலிஸார் நேற்று வியாழக்கிழமை மாலை இந்நபரைக் கைது செய்தனர்.

இவ்வாறு கைதான மலையடிகிராமம் - 4 இனைச் சேர்ந்த 33 வயதான செய்னுல் ஆப்தீன் இஸ்ஹாக் என்ற சந்தேக நபர் வீட்டின் மூன்றாவது மாடியின் மேல் பூச்சாடிகளுடன் இணைத்து இரு கஞ்சா செடிகளை வளர்த்து வந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.





# ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவிர்த்திக்க வலியுறுத்தி புல்மோட்டையில் கவனவீர்ப்பு!

திருகோணமலை - புல்மோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு கோரி, மாணவர்களும் பெற்றோர்களும், நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்லூரியின் பிரதான கதவை மூடி பதாதைகளை ஏந்தியவாறு மாணவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

திறமையான மாணவர்கள் பலர் உள்ளோம். ஆனால், வழிநடத்த ஆசிரியர்கள்தான் இல்லை. 1, 200 மாணவர்களுக்கு 24 ஆசிரியர்கள் எந்தவிதத்தில் நியாயம்? - போன்ற வாசகங்கள் அமைந்த பதாதை களை மாண வர்கள் ஏந்தியிருந்தனர்.

1905 ஆம் ஆண்டு புல்மோட்டையில் முஸ்லிம் மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு தற்போது தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டிருக்கும் இக்கல்லூரியில் 64 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதிலும் 24 ஆசிரியர்கள் மாத்திரமே கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகத் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் ஸ்ரீதரனைக் கேட்டபோது -

இக்கல்லூரிக்கு 49 ஆசிரியர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்ட போதும் 29 ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 15 ஆம் திகதி பட்டதாரி நியமனம் பெற்ற 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமித்துள்ளமையுடன், திரியாய் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த ஆசிரியர் ஒருவரையும், புல்மோட்டை அறபா வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த ஆசிரியர் ஒருவரையும் புல்மோட்டை மத்திய கல்லூரிக்கு உடனடியாக அனுப்பி வைத்துள்ளோம்" - அவர் தெரிவித்தார்.

# படுக்கையில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

வாழைச்சேனை பிறைந்துரைச்சேனை பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்த நிலையில் அவரது வீட்டில் இருந்து நேற்று மாலை மீட்கப்பட்டார் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டாரா தெரிவித்தார்.

பிறைந்துரைச்சேனை முஹம்மதியா வீதியில் வசித்து வந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரும் மூன்று பிள்ளைகளின் தந்தையுமான முஹம்மது முஸ்தபா செய்யது ஹமீட் (வயது -60) என்பவரே மரணமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு தனது அறையில் உறங்கியவர் மீண்டும் எழும்பாத நிலையில் அவரது பிள்ளைகள் மதியம் எழுப்பியபோது எந்தவித சத்தமும் வராத நிலையில் கதவை உடைத்தபோது அவர் மரணமடைந்த நிலையில் காணப்பட்டார் எனப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் அவசர சேவை பிரிவின் வாகன உதவியுடன் சடலத்தை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இவரது மரணம் தொடர்பான விசாரனைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கண் சத்திரசிகிச்சைக்கான உபகரணம் கல்முனை வைத்தியசாலைக்கு வழங்கல்



கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கண் சத்திரசிகிச்சை உபகரணம் ஒன்று, அனைத்துலக மருத்துவநல அமைப்பினால் (IMHO) அன்பளிப்புச் செய்யப்பட்டது. நீண்ட காலமாக கண் சத்திர சிகிச்சைக்காக கண் துல்லியமாக அளவிடும் டிஜிற்றல் இயந்திரம் இல்லாமையால் பல சிரமங்களை நோயாளிகள் எதிர்நோக்கிவந்தனர்.

இதனைக் கருத்தில்கொண்டு, கண் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் வைத்தியர் என்.நிரோஷனின் வேண்டுகோளுக்கு இணங்க, கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இரா. முரளீஸ்வரனின் நீண்டநாள் முயற்சியின் பயனாக, அனைத்துலக மருத்துவநல அமைப்பிலிருந்து 25 லட்சம் ரூபா பெறுமதியான கண் வில்லை துல்லியமாக அளவிடும் டிஜிற்றல் இயந்திரம் கிடைக்கப்பெற்றது. இதனை அனைத்துலக மருத்துவநல அமைப்பு (அமெரிக்கா) சார்பாக இருதய நோய் வைத்திய நிபுணர் வைத்தியர் அருள்நிதி, வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இரா.முரளீஸ்வரனிடம் கையளித்தார். இந்த அனைத்துலக மருத்துவநல அமைப்பு (IMHO) பல்வேறு இலவச கண் சிகிச்சை முகாம்களை இவ்வைத்தியசாலையில் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்தியத் தீவுகளுடனான 2ஆவது டெஸ்ட் 507 ஓட்டங்களைக் குவித்தது இங்கிலாந்து அணி




இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட நிறைவில் தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒரு விக்கெட்டை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பார்படோஸில் நடைபெற்றுவரும் இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 9 விக்கெட்டுக்களை இழந்து 507 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிலையில் தனது முதல் இன்னிங்ஸை நிறைவுசெய்துகொண்டது. அணித்தலைவர் ஜோ ரூட் 153 ஓட்டங்களையும் பென் ஸ்டோக்ஸ் 120 ஓட்டங்களையும், டான் லோரன்ஸ் 91 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரசமி பெருமாள் 3 விக்கெட்டுக்களையும் கெமர் ரோச் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய இரண்டாம்நாள் ஆட்டநேர நிறைவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 71 ஓட்டங்களை எடுத்திருந்தது. பிரத்வய்ட் 28 ஓட்டங்களுடனும் ப்ரூக்ஸ் 31 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களைவிட மேற்கிந்தியத் தீவுகள் அணி 436 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது.

## தயக்கமின்றி மன்கட் முறையில் ஆட்டமிழக்கச் செய்யுங்கள்

### கிரிக்கெட் விதி மாற்றத்தை வரைவேற்று அஸ்வின் கருத்து




இந்திய அணியின் சுழல் பந்துவீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின், ஒருசில முறை மன்கட் முறையில் பந்துவீச்சாளர் முனையில் நின்றுகொண்டிருக்கும் துடுப்பாட்ட வீரர்களை ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்கச் செய்வது தொடர்பாக கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

தற்போது, மன்கட் முறையில் ரன்-அவுட் செய்தால் அதை அதிகாரபூர்வ ரன்-அவுட் ஆட்டமிழப்பாக கருதும் வகையில் சர்வதேச கிரிக்கெட் விதிமுறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனை அஸ்வின் வரவேற்றுள்ளார்.

என் சக பந்து வீச்சாளர்களே, தயது செய்து புரிந்து கொள்ளுங்கள். பந்துவீச்சாளர் முனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரர் பந்து வீசுவதற்கு முன்னதாக ஒரு அடி நகர்ந்தாலும் அதுவே உங்கள் கிரிக்கெட் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுவிடலாம். அதாவது, அவர் கூடுதலாக நகர்ந்து செல்வதன் மூலம் மறுமுனைக்கு செல்லும் வாய்ப்பைப் பெற்று அடுத்த பந்தில் சிக்சரும் விளாசினால் அது உங்களுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவே பந்து வீசுவற்கு முன்பே உங்கள் முனையில் நிற்கும் துடுப்பாட்ட வீரர் கோட்டை விட்டு நகர்ந்தால் தயக்கமின்றி ரன்-அவுட் செய்ய வேண்டும் என்பதே எனது கருத்தாகும், என்று அஸ்வின் தெரிவித்திருக்கிறார்.

## இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் நடால், கார்பியா அரையிறுதியில்





*இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவுக்கான காலிறுதிப் போட்டிகளில் ஸ்பெயினின் ரபேல் நடாலும், கார்லோஸ் அல்கராஸ் கார்பியாவும் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*முதல் காலிறுதிப் போட்டியில் ஸ்பெயினின் கார்பியாவும் பிரித்தானியாவின் கமரூன் நோரியும் ஒருவரையொருவர் எதிர்கொண்டிருந்தனர். இந்தப்போட்டியில், அல்கராஸ் கார்பியா, 6-4, 6-3 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இரண்டாவது காலிறுதிப் போட்டியில், ஸ்பெயினின் ரபேல் நடாலும் ஆஸ்திரேலியாவின் நிக் கிர்கியோசும் மோதியிருந்தனர். இந்தப் போட்டியில், 7-6, 5-7, 6-4 என்ற செட்களின் அடிப்படையில் நடால் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்துள்ளார்.*




## மகளிர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் மே.இ.தீவுகள் அணி 4 ஓட்டங்களால் வெற்றி

நியூசிலாந்தில் நடைபெற்று வரும் மகளிர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 17 ஆவது லீக் போட்டியில் பங்களாதேஷ் அணியும், மேற்கிந்தியத்தீவுகள் அணியும் மோதியிருந்தன.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களை எடுத்தது. ஷெமைன் கம்பல் 53 ஓட்டங்களோடு இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். பங்களாதேஷ் அணியின் சல்மா காதுன், நஹிதா அக்டர் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

அடுத்ததாக 141 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் பங்களாதேஷ் அணி களமிறங்கியது. ஆனால், மேற்கிந்திய வீராங்கனைகளின் பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்த பங்களாதேஷ் அணியினர் 49.3 ஓவர்களில் 136 ஓட்டங்களை மட்டுமே எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. கப்டன் நிகர் சுல்தானா 25 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
வெள்ளிக்கிழமை 18.03.2022

# நைகர் நாட்டில் பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு; 19 பேர் சாவு



மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புர்கினா பாசோ நாட்டின் தலைநகரான ஔவாகடுகோவில் இருந்து, நைகர் நாட்டின் தலைநகர் நியாமி நோக்கி, பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது.

போனோ கிராமம் அருகே இரு சக்கர வாகனங்களில் வந்த 12 ஜிகாதிகள், அந்த பேருந்தை மறித்து நிறுத்தினர்.

பின்னர் அதில் இருந்த பயணிகளை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் 19 பயணிகள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இதைத் தொடர்ந்து அந்த பேருந்தை ஜிகாதிகள், தீ வைத்து எரித்தனர் என போக்குவரத்து நிறுவனங்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

அல்கொய்தா மற்றும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய ஜிகாதி குழுவினர், புர்கினா பாசோ நாட்டில் இது போன்ற தாக்குதல்களை நடத்தி உள்ளனர். ஆனால் இந்த முறை நடைபெற்ற பேருந்து தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.




# போலந்து நாட்டு யுவதி உலக அழகியாக தேர்வு

அமெரிக்க நாட்டின் தன்னாட்சி பிரதேசமான புவேர்ட்டோ ரிக்கோவின் தலைநகரான சான் ஜுவான் நகரில் 'மிஸ்வேர்ல்ட்' 2021ஆம் ஆண்டின் உலக அழகிப்போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இந்தப் போட்டியில் இந்தியாவின் சார்பில் மானசா வாரணாசி கலந்து கொண்டார்.

இந்தப்போட்டியில்போலந்து நாட்டைச் சேர்ந்த கரோலினா பைலாவ்ஸ்கா (வயது-23) உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருக்கு 2019ஆம் ஆண்டின் உலக அழகி டோனி ஆன் சிங் மகுடம் சூட்டினார்.

கரோலினா பைலாவ்ஸ்கா நிர்வாகவியலில் முதுநிலை பட்டம் படித்து வருகிறார். இவர் எதிர்காலத்தில் பி.எச்.டி. ஆராய்ச்சிப்பட்டம் பெற விரும்புகிறார். அத்துடன் மொடல் அழகியாகவும் தொடர விருப்பம் தெரிவித்துள்ளார். மேலும், உத்வேகம் அளிக்கிற பேச்சாளராகவும் திகழ விரும்புகிறார்.

'மிஸ் வேர்ல்ட்' உலக அழகி போட்டியில் அமெரிக்கா வாழ் இந்திய அழகி சைனி இரண்டாவது இடம் (முதல் ரன்னர்-அப்) பிடித்தார். இவர் பஞ்சாப் மாநிலம், லூதியானாவை பூர்வீகமாகக் கொண்டவர்.

இவர் 5 வயதாக இருந்த போது, குடும்பம் அமெரிக்காவில் குடியேறியது. இவருக்கு இதயத்தில் பிரச்சினை என 12 வயதிலேயே நிரந்தரமான பேஸ்மேக்கர் பொருத்தப்பட்டுள்ளார் என தகவல்கள் கூறுகின்றன.

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட இந்திய அழகி மானசா வாரணாசி முதல்13இடங்களுக்குள்தான் வர முடிந்துள்ளது.

2017 ஆம் ஆண்டு நடந்த 'மிஸ் வேர்ல்ட்' உலக அழகி போட்டியில் இந்தியாவின் நடிகை மனுஷி சில்லர் அழகி பட்டம் வென்றது நினைவு கூரத்தக்கது.

கடந்த ஆண்டு நடந்த 'மிஸ் யுனிவர்ஸ்' அழகிப்போட்டியில் இந்தியாவின் ஹர்னாஸ் சந்து, பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் நாட்டு அதிபர் நடித்த ரி.வி. தொடர் மறுஒளிபரப்பு



உக்ரைன் நாட்டின் அதிபராக இருந்து, ரஷ்யா தொடுத்துள்ள போரால் இன்று உலகம் அறிந்த தலைவராக மாறி இருப்பவர், 44 வயதேஆனவிளாடிமிர்ஜெலன்ஸ்கி.

இவரது வாழ்க்கையில் சுவாரசியங்களுக்கு பஞ்சம் இல்லை.

இவர் ஆரம்பத்தில் நடிகராக இருந்தார். அப்போது அங்கு ரி.வியில் 'சர்வண்ட் ஆப் தி பீப்பிள்' (மக்கள் சேவகன்) என்ற அரசியல் நையாண்டி ரி.வி. தொடர்' மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமானது.

2015-2019 ஆண்டுகளில் ரி.வியில் ஒளிபரப்பான இந்த தொடரில் விளாடிமிர் ஜெலன்ஸ்கி, 'வாசில் பட்ரோவிச் கோலோபோர்ட்கோ' என்ற பள்ளி ஆசிரியர் பாத்திரத்தில் நடித்து அசத்தினார்.

இந்த தொடரில் இவர் ஊழலுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி ஒரே நாளில் பிரபலமானார். அதைத் தொடர்ந்து அவர் நாட்டின் அதிபராகவும் ஆகி விட்டார்.

விளாடிமிர் ஜெலன்ஸ்கி நிஜ வாழ்க்கையிலும் திருப்பம் ஏற்பட்டது. 'சர்வண்ட் ஆப் தி பீப்பிள்' பெயரிலேயே தொடங்கப்பட்ட அரசியல் கட்சியில் சேர்ந்தார். அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார். 2019 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி உக்ரைன் அதிபர் பதவியை ஏற்றார்.

ரி.வி. தொடரில் அவர் நடித்தது, நிஜ வாழ்க்கையில் பிரதிபலித்தது. அவர் அதிபர் பதவிக்கு வந்ததும் இந்த ரி.வி.தொடர் நின்று போனது.

இப்போது ரஷ்யா தொடுத்துள்ள போரை அவர் துணிச்சலுடன் எதிர்கொண்டு வருகிறார். இதனால் உலக நாடுகளில் மிகவும் பேசப்படுகிற ஒரு தலைவராக மாறி இருக்கிறார்.

இதனால் அவர் நடித்த ரி.வி. தொடருக்கு உலகமெங்கும் கடும் கேள்வி ஏற்பட்டுள்ளது.

நெட்பிளிக்ஸ் நிறுவனத்தார் இந்த ரி.வி. தொடரை அமெரிக்காவில் மீண்டும் ஒளிபரப்ப உள்ளனர். இதை ஒரு டுவிட்டர் பதிவில் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், நீங்கள் கேட்டீர்கள். மீண்டும் வந்து விட்டது. சர்வண்ட் ஆப் தி பீப்பிள் மீண்டும் அமெரிக்காவில் நெட்பிளிக்சில் கிடைக்கிறது. 2015ஆம் ஆண்டு வெளியான நையாண்டி நகைச்சுவை தொடரில் விளாடிமிர் ஜெலன்ஸ்கி ஆசிரியராக நடித்துள்ளார். அவர் ஊழலுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்திய வீடியோவுக்கு பிறகு பிரபலம் ஆகிறார். எதிர்பாராதவிதமாக நாட்டின் அதிபராகவும் ஆகி விடுகிறார் என கூறப்பட்டுள்ளது.



# வடக்கு சிலியை தாக்கிய இராட்சத மணற்புயல்

வடக்கு சிலியில் உள்ள டியகோ டி அல்மாக்ரோ நகரத்தை இராட்சத மணல்புயல் தாக்கிய காட்சிகள் வெளியாகி உள்ளன.

மணல் புயல் வீசியதன் விளைவாக சுமார் 9 ஆயிரம் வீடுகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அட்டகாமா பாலைவனத்தை ஒட்டி அமைந்துள்ள இந்த நகரத்தை நோக்கி இராட்சத புழுதி நகர்ந்து வரும் காட்சிகள் வீடியோவில் பதிவாகி உள்ளன.

எனினும், ஏற்கனவே இடி மின்னலுடன் கூடிய கன மழை மற்றும் ஆலங்கட்டி மழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும், மணல் புயல் வீசக்கூடும் எனவும் வானிலை மையம் எச்சரிக்கை விடுத்திருந்ததால் நகரத்தில் போதுமான முன்னெச் சரிக்கைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## சீனாவில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா பாதிப்பு பல்வேறு நகரங்களில் தொற்று பரிசோதனை தீவிரம்

சீனாவில் தினசரி கொரோனாப் பாதிப்புகள் அதிகரித்துவருவதன்எதிரொலியாக அங்குள்ள பல்வேறு நகரங்களில் தொற்று பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் தற்காலிக பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டிருக்கும் நிலையில், மையங்களுக்கு வெளியே நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காலை முதலே குளிருக்கு மத்தியில் நீண்ட வரிசையில் காத்திருந்து பரிசோதனை செய்து வருகின்றனர்.

பாதிப்பு அதிகரித்து காணப்படும் ஜூலின் உள்ளிட்ட மாகாணங்களில் தற்காலிகமருத்துவமனை கட்டும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதனிடையே, சீனாவில் புதிதாக 2 ஆயிரத்து 461 பேருக்கு கொரோனாத் தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதாக அந்நாட்டு தேசிய சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது.



## ரஷ்யாவின் தாக்குதலில் உக்ரைன் நடிகை சாவு



*உக்ரைனைச் சேர்ந்த பிரபல நடிகை ஒக்சானா ஸ்வெட்ஸ் ரஷ்யாவின் ரொக்கெட் தாக்குதலில் உயிரிழந்தார்.*

*கிவ் நகரில் ஒரு கட்டடம் மீது ரொக்கெட் குண்டுகளை ஏவி ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இதில் அந்தக் கட்டடத்தில் இருந்த 67 வயதான பழம்பெரும் நடிகை ஒக்சானா பலியானார்.*

*உக்ரைனின் உயரிய திரையுலக விருதுகளை அவர் பெற்றுள்ளார்.*

# பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாவிட்டால் ஜனாதிபதியே அமெரிக்காவுக்கு செல்லுங்கள்!

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவிப்பு

தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாவிட்டால் இந்த நாட்டை கொடுத்து விட்டு உங்கள் வாழ்விடமான அமெரிக்காவுக்குச் செல்லுங்கள் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜெயசிங்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். வவுனியா, முஸ்லிம் மகாவித்தியாலய மண்டபத்தில் அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் வடமாகாணத்தில் வந்து நிற்கின்றேன். இங்கும் ஆசிரியர்களுக்கு நிறையப் பிரச்சினைகள் உள்ளன. அது தொடர்பில் பல அதிபர், ஆசிரியர்கள் வந்து கலந்துரையாடினார்கள். அவர்களது பிரச்சினைகளுக்காக எமது தொழிற்சங்கம் குரல் கொடுக்கும்.

எரிபொருள் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரே பேசியிருந்தோம். அதற்கு எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை. இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று வருகின்றமை தொடர்பில் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இன்று வரை அதற்கான தீர்வு எவையும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் நகரப் பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாகவுள்ளது.

இந்த வருடம் பாடசாலைகளின் வாயில்கள் திறக்கப்பட்டுள்ள போதும் பாடசாலைக்குச் செல்வதற்குப் பிள்ளைகளுக்கு வழியில்லாமல்உள்ளது.

நாட்டில் டொலரைக் கொண்டு வருவதற்கான எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. வெளிநாட்டில் கடன் பெற்றுள்ளார்கள். பொருள்கள் பெற்றுள்ளார்கள்.

அதனால் எமது நாட்டில் டொலர் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இந்த நாட்டில் தேவையான பல விடயங்களைச் செய்து வெளி நாடுகளில் இருந்து கடன் வாங்காது விட்டால் டொலர் பிரச்சினையைத் தீர்க்க முடியும். இந்த அரசாங்கத்தால் நாட்டைக் காப்பாற்ற முடியாது. நாட்டுப் பிரச்சினைகளை இந்த அரசாங்கத்தால் தீர்க்க முடியாது உள்ளது. அதனால் புதிய அரசாங்கம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஜனாதிபதியால் நாட்டைக் காப்பாற்ற முடியவில்லை. கொரோனாவால் தான் இந்த நாட்டில் பிரச்சினை எனப் பொய் கூறுகிறார்கள். ஆசிய நாடுகளில் பங்களாதேஷ், இந்தியா போன்ற ஆசியா நாடுகள் எல்லாவற்றிலும் கொரோனா பிரச்சினை இருந்தது. அங்கு டொலரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார்கள். எமது நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இயலாமையால் தான் இந்த நாட்டின் நிலைக்குக் கொரோனா என சாட்டுகின்றார். கொரோனாவால் தான் இந்த நிலை என அவர் கூற முடியாது. புதன்கிழமை இரவு 11 நிமிடத்தில் அவர் கதைத்த விடயத்தில் இதைத் தான் சொல்லுகிறார். தற்போதைய பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண உங்களால் முடியாவிட்டால் இந்த நாட்டை கொடுத்து விட்டு உங்கள் வாழ்விடமான அமெரிக்காவுக்கு செல்லுங்கள். இந்த நாட்டை சிறப்பாகக் கொண்டு செல்ல ஆள்கள் உள்ளார்கள். – என மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் கைதிகளுக்கான கைவினைப் பயிற்சி





சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் இணைந்து பனை அபிவிருத்திச் சபையின் மற்றுமொரு மைல்கல்லாக யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் கைதிகளுக்கான கைவினைப் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் மூலம் கைதிகளுக்கு பனை ஓலை தொடர்பான பொருள்களை உற்பத்தி செய்வது தொடர்பான விசேட பாடநெறி வழங்கப்படுவதுடன், பாடநெறியின் இறுதியில் அரசாங்க அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் வழங்கப்படும். எதிர்காலத்தில் அவர்களின் உற்பத்திப் பொருள்கள் பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவும் செய்யப்படும்.

மேலும், அரசு வங்கியில் இணைந்து, கைதிகளுக்கான கணக்குகளைத் தொடங்கி, அந்தக் கணக்கில் பொருள்களுக்கு வாங்கிய பணத்தை வைப்பு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் ஆணையாளர், பிரதி நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க மற்றும் யாழ். சிறைச்சாலைகளின் உயர்மட்ட அதிகாரிகள் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுமதியும் உதவியும் வழங்கியுள்ளனர்.

# மசகு எண்ணெய் விலை உலக சந்தையில் வீழ்ச்சி!

## இலங்கையில் குறைப்பில்லை

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், இலங்கையில் எரிபொருள் விலையை குறைக்க முடியாது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட நஷ்டம் காரணமாக எரிபொருள் விலையை குறைக்க முடியாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உக்ரைன் – ரஷ்யா இடையே போர் வெடித்துள்ள நிலையில், கடந்த வாரம் சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 130 அமெரிக்க டொலர்களாக உயர்ந்தது. இதனால் இலங்கையில் பெற்றோல், டீசல் உள்ளிட்ட அனைத்து வகையான எரிபொருள்களின் விலைகளும் சடுதியாக உயர்வடைந்தது.

அத்துடன், எரிபொருளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது மசகு எண்ணெய் விலை 100 டொலர் வரை குறைந்துள்ளது. இவ்வாறான பின்னணியில் இலங்கையில் எரிபொருள் விலையை குறைக்க முடியாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# மன்னார் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை

மன்னார் மாவட்டத்தில் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய செய்கையைத் தொடர்ந்து அறுவடை செய்கின்ற நெல்லை உலர வைப்பதற்கான தளங்கள் இல்லாமையில் பிரதான வீதிகளைப் பயன்படுத்தும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் மற்றும் முசலி போன்ற பிரதேசங்களில் இந்த நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

விவசாயம் செய்யும் வயல் நிலங்களுக்கு அருகில் பொதுவான தளங்கள் அமைத்துக் கொடுத்தால் பல விவசாயிகள் பலன் பெறுவார்கள். நெல் அறுவடை முடிந்தவுடன் டிராக்டர்களின் நெற்களை ஏற்றிக் கொண்டு பல கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பிரதான தார் வீதிகளுக்கு வரவேண்டியுள்ளது.

இதனால் செலவுகள் பல மடங்கு அதிகரிக்கிறன. அதில் டிராக்டர் வசதி இல்லாதவர்களின் நிலை பரிதா பத்துக்குரியது. பல நூறு ஏக்கர் வயல் நிலங்களை உள்ளடக்கி பொதுவான தளங்களை அமைத்துக் கொடுப்பது விவசா யத்துக்கும் விவசாயிகளுக்கும் மிகவும் பயன்பெறும்.

நானாட்டான் பிரதேசத்தில் உமநகரி கீழ்ப் பகுதியிலும் சிறு வெளி பிரதேசங்களிலும் மேட்டு நிலங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான மேட்டு நிலங்களை அடையாளம் கண்டு நெல் உலர வைக்கும் தளங்களை அமைப்பதற்கு விவசாய அமைப்புக்கள் முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். மேலும் இவ்வாறு வீதிகளில் நெல் காயப்போடுவதால் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்படுவதோடு விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன என மன்னார் மாவட்ட விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் இலங்கை கடற்தொழிலாளர் கைது

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கை கடற்தொழிலாளர்கள் ஆறு பேரை கைது செய்த இந்திய கடலோர காவல் படை, தருவைகுளம் கடற்தொழில் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். இந்திய கடலோர காவல் படையின் தூத்துக்குடி பிரிவுக்குச் சொந்தமான வஜ்ரா ரோந்து கப்பல் சர்வதேச கடல் பகுதியில் 120 கடல் மைல் தொலைவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டி ருந்தது. அப்போது, இந்திய கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த இலங்கையைச் கடற்தொழிலாளர்கள் கடற்தொழிலில் ஈடுபட்டு கொண்டி ருந்தனர்.

இதைத்தொடர்ந்து, இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட இலங்கை கடற்தொழிலாளர்கள் ஆறு பேரையும், அவர்களது படகையும் கடலோர காவல் படையினர் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட கடற்தொழிலாளர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கைது செய்யப்பட்ட கடற்தொழிலாளர்கள் ஆறு பேரும் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. இதையடுத்து, அவர்கள் ஆறு பேரையும் இந்திய கடலோர காவல் படையினர் தூத்துக்குடி தருவைகுளம் கடற்தொழில் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்களிடம், மத்திய, மாநில உளவுத்துறை, சுங்கத் துறையினர், மீன்வளத் துறையினர், காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர். கடற்தொழிலாளர் களின் மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு 6 பேரையும் இன்று (வெள்ளிக்கிழமை) ராமநாதபுரம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டார்கள் என மெரைன் பொலிஸார் தெரிவித்தனர்.




# மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்



# மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்



காலைக்கதிர் மாலைப்பதிப்பு

வேட்புமனுத் தாக்கல் முடிந்ததும்

இரு வாரங்களுக்கு நாடு முடக்கப்படும்!

இரும்புக் கைகொண்டு கொரோனாவை அடக்கத் தயாராகிறது கோட்டா அரசு

மூர்க்கத்தனம் மிக்க நடவடிக்கை கொரோனாவை தடுக்க அவசியம்

இன்று காலை வேட்புமனுத் தாக்கல்...

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

தேசியப் பட்டியலில் அம்பிகா!

அவரே தன் வாயால் தகவல்

3 மாணவர்களுக்கும் கொரோனா பாதிப்பு

தேர்தலை ஒத்திவைக்க தயாராகிறது ஆணையம்

கோட்டாபயவுடன் நாளை முக்கிய ஆலோசனை

ஐக்கிய மக்கள் சக்தி

SAMAGI JANA BALAWEGAYA

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

55 வயதிலும் ஓய்வு பெறலாம்

முற்கூட்டியே வாக்களிக்கும் முறை வரும்!

அரசு இணக்கமாம்

அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் கொரோனாச் சட்டம் வேறுபடுகின்றதா?

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

மாபெரும் எழுச்சிப் பேரணி வவுனியாவுக்குப் பயணம்!

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

கொழும்புத் துறைமுகத்தின் ஓர் அங்குலத்தைக் கூட சர்வதேசத்துக்கு வழங்கவேமாட்டாது ராஜபக்ஷ அரசு

- The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

13 ஆவது திருத்தம் உட்பட அர்த்தம் உள்ள

தமிழர்களின் எதிர்பார்ப்பு நிறைவு செய்யுங்கள்!

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

மஹர சிறைக் கலவரம் கட்டுப்பாட்டுக்குள் 8 பேர் உயிரிழப்பு; 70 பேர் வரை படுகாயம்

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

பொலிகண்டியை வந்தடைந்தது பேரணி; பல்லாயிரக் கணக்கானோர் அணிதிரள்வு

ஆயிரக் கணக்கான வாகனங்களும் பவனி

கோட்டாவுடன் ஜெய்சங்கர் மூடிய அறைக்குள் சந்திப்பு

சிறுபான்மை இன மக்களின் மனங்களைக் காயப்படுத்தாதீர்

தியாகி திலீபன் நினைவிடத்தில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி!

கொழும்புத் துறைமுகத்தை சர்வதேசத்து கொடுக்கவே முயற்சிக்கிறது ராஜபக்ஷ

சிங்கள - பௌத்த மக்களைச் சிற்றமடையச் செய்யாதீர்!




# மூன்றாம் ஆண்டில் 'காலைக்கதிர்' மாலை இதழ்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல - 551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2022இல் வெளியிடப்பெற்றது.